பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 01 வியாழக்கிழமை (14-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 49

## வீரச்செயல் புரிந்த

# வேங்கைகளைப் பாராட்டி தலைவர் பிரபா பரிசளிப்பு

### நேற்று நடந்த கௌரவிப்பு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜனவரி 14

வீரச்செயல் புரிந்த 17 போராளிகளைப் பாராட்டி அவர்களுக்கு தலைவர்பிரபாகரன் நேற்று பரிசில்கள் வழங்கினார்.

"எமது விடுதலை இயக்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு போராளியினதும் தனிப்பட்ட திறமையிலும், செயற்பாட்டிலுமே விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. எனினும் சில குறிப்பிட்ட போராளிகளின் அபாரமான வீர சாதனைகளை நாம் இனங்கண்டு கௌரவிக்கிறோம். இது ஏனைய போராளிகளுக்கு ஊக்கத்தை அளிக்கும்." — இவ்வாறு போராளிகளுக்கு பரிசில்கள் வழங்கிய நிகழ்ச்சியில் உரையாற்றும் பொழுது தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டார்.

இராணுவ வேவுப்பிரிவில் பணியாற்றி சாதனை புரிந்தவர்கள் பற்றிக் குறிப்பிட்ட தலைவர், "உங்களது செயற்பாடு எத்தனை கஷ்டங்களும் அபத்துக்களும் நிறைந்தது என்பதை நான் அறிவேன். ஒரு தாக்குதல் திட்டம் வெற்றி பெறுவதற்கு உங்களது பணி மிகவும் முக்கியமானது" எனக் கூறினார்.

"வீரசாதனை புரிந்த நீங்கள் ஏனைய போராளிகளுக்கு வழிகாட்டிகளாக செயற்பட

[3 ஆம் பக்கம் பார்க்க]

## 4 புதிய பட்டாலியன்கள் அமைக்க ராணுவம் முடிவு

கொழும்பு, ஜன. 14

இலங்கை இராணுவத்தில் நான்கு புதிய பட்டாலியன்கள் உருவாக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

படையை விட்டு தப்பி ஓடியவர்களுக்கும் போர் முனையில் உயிரிழந்த படையினருக்குப் பதிலாக இப்புதிய பட்டாலியன்கள் அமைக்கப் படுவதாகப் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

புதிய பட்டாலியன்கள் அமைக்கப்படுவதை, ஆயுத படையின் பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கையாகக் கருதக்கூடாது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய பட்டாலியன்களை அமைத்து படையின் பலத்தை அதிகரிப்பது இல்லை என்று அரசாங்கம் கொள்கையளவில் தீர்மானித்துள்ளதாகவும் —

தற்போது அமைக்கப்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)



போராளி சூரியனுக்கு நேற்று தலைவர் பரிசளித்தபோது எடுக்கப்பட்ட படம்

# வடக்கில் ராணுவ நடவடிக்கை இம்மாத இறுதியில் நடக்கும்?

கொழும்பு, ஜன. 14

வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை நடத்துவதற்கு, அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக பாதுகாப்புப் படை வட்டாரங்களில் இருந்து அறியவருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த முயற்சிக்காக அனுராதபுரத்தில் "போர் நடவடிக்கை பிரிவு" ஒன்றை ஆரம்பிக்கவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டின்மீது படையெடுப்பை நடத்துவதற்கு முன்னோடியாக வடபகுதியில் ஆயுதங்களையும், ஆட்பலத்தையும் படையினர் குவித்து வருகின்றனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புலிகள் பிரமுகர் லோறன்ஸ் திலகருடன் பாரிசில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பேச்சுக்கள் குறித்து அமைச்சர் ஏ.சீ.எஸ் ஹமீத் அரசாங்க உயர்மட்

[7 ஆம் பக்கம் பார்க்க]

**உதயனின் நல்வாழ்த்துக்கள்**

உழைப்புக்குப் பயன் தந்த உதயனுக்கு உழவரும் ஏனையோரும் பொங்கலிட்டு உவகை பொங்கும் இந்நாளில் —

உதயன் தனது வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள், செய்தியாளர்கள்,ஆதரவாளர்கள் அபிமானிகள் அனைவருக்கும் இதயம் பொங்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறான்.

## 10 ஆயிரம் படையினர் இதுவரை தப்பி ஓட்டம்!

கொழும்பு, ஜன. 14

இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் சேவை ஆகியவற்றில் இருந்து இது வரை தப்பி ஓடியவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரம் வரையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி "சண்டே ரைம்ஸ்" இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் 12 ஆயிரம் படையினர் வரையில் தப்பி ஓடினர் என்றும் —

மேலும் படையினர் தப்பி ஓடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் கூறின. (உ—எ)

# மணலாறில் அதிரடித் தாக்கு! நான்கு படையினர் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம், ஜன 14

மணலாறுப் பகுதியில் நேற்றுக் காலை 7-30 மணியளவில் இராணுவக் காவலரண்கள் மீதும், ரோந்து அணி ஒன்றின் மீதும் ஒரே சமயத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்

சிலோன்தியேட்டர் இராணுவ முகாமிற்கும், முந்திரிகைக்குளம் இராணுவ முகாமிற்கும் இடையே அமைந்துள்ள காவலரண்கள் இரண்டின் மீதும் —

அப்பகுதியில் இராணுவ ரோந்து அணி ஒன்றின் மீதுமே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட சமயம் அங்குள்ள சிங்களக் குடியேற்றங்களில் இருக்கும் இராணுவ முகாம்களில் இருந்து கடும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

இத்தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய இராணுவ தளபாடங்

(7 ஆம் பக்கம் பார்க்க)

### வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன. 14

நேற்றுக்காலை மணலாறில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தின் போது லெப்டினன்ட் குமணன் அல்லது சிவராஜ் (சின்னத்துரை சிவகுமார்—செங்கலடி மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவடைந்தார்.

## ஸ்ரீநிவாசன் திட்டம் காகித றோசா

# யுத்த நிறுத்தத்தை அறிவித்து புலிகளுடன் பேச வேண்டும்

### ஸ்ரீ. ல. சு. கட்சி எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஜன 14

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் விடுதலைப் புலிகளுடன் பேசி ஓர் இணக்கத்துக்கு வந்தேயாக வேண்டும்.

பேச்சு வார்த்தைக்கு முன்னர் அரசு யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்.

சுதந்திரக்கட்சி எம். பி யும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான திரு. ரி. டபிள்யூ. ராஜரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. ராஜரத்தினம் நாடாளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினராகவும் உள்ளார். அவர் "சண்டே ரைம்ஸுக்கு" அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீநிவாசன் யோசனைத் திட்டத்தை நான் ஆதரிக்கப் போவதில்லை அந்த யோசனை ... இப்போது ...

(7 ஆம் பக்கம் பார்க்க)

# இணைப்புப் பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வுகள் உள்ளன

### செய்தியாளர் மாநாட்டில் அங்கிலிக்கன் ஆயர்

யாழ்ப்பாணம், ஜன 14

வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வுகாண பல மாற்றுவழிகள் உள்ளன என்று தெரிவித்தார் அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி வணக்கென்னத் பெர்னாண்டோ.

தமது யாழ். விஜயத்தின் முடிவில் நேற்று நண்பகல் செய்தியாளர்களைச் சந்தித்து உரையாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:-

எமது விஜயத்தின்போது யாழ்குடா மக்கள் படும் துன்பங்களைக் கண்டேன்; பேரழிவுகளைப் பார்த்தேன்

கொழும்பு திரும்பியதும் இவை பற்றி உரிய அதிகாரி

[7 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலியூடாகப் படகில் வந்த

# அங்கிலிக்கன் ஆயர் விமானத்தில் திரும்பினார்

யாழ்ப்பாணம், ஜன. 14

அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி வண. கென்னத் பெர்னாண்டோ தனது யாழ் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று மாலை இங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

கிழக்காசிய தேசிய திறிஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவின் நல்லெண்ணம் தெற்கில் பாராட்டுப் பெறும்

## அங்கிலிக்கன் ஆயர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 14

"சிறைவைக்கப்பட்டிருந்த இரண்டு பொலீஸாரை விடுதலை செய்து தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் மேற்கொண்ட நல்லெண்ண நடவடிக்கை தென்னிலங்கையில் அனைத்துத் தரப்பினரினதும்

(7ஆம் பக்கம் பார்க்க)


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது

பொங்கல் வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகை

* இமிற்றேசன் கோல்ட் கவறிங் நகைகள்
* மணப் பெண்களின் சோடனை நகைகள்
* லேஸ், நூல் வகைகள்
* சிறுவர் விளையாட்டுப் பொருள்கள்
* உள்நாட்டு வெளிநாட்டு அழகு சாதனப் பொருள்கள்

நிதான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

ஜெயா அழகு சாதன மாளிகை

177 A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

ஜெயா பென்ஸி ஹவுஸ்

160, நவீன சந்தை [உட்புறம்], யாழ்ப்பாணம். [24067]



பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

தமிழர் வாழ்வில் அமைதியும் மகிழ்ச்சியும் சாந்தியும் நிலைக்க வேண்டும் என்று இந் நன்னாளில் இறைவனை வேண்டுகின்றோம்.

★ அதி நவீன மிக்ஸர் பொருத்தப்பட்ட மிக்ஸிங் கமரா மூலம் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகளை வீடியோ படம் பிடித்திட,

சுப்ப ஸோ வீடியோ ஓடியோ சென்ரர்

198 / C, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [24069]


## கண்ணீர் அஞ்சலி

செல்வி ஔவைப்பிள்ளை இராமநாதபிள்ளை (தும்பளை)

பலாலி ஆசிரிய கலாசாலை ஆங்கில நெறி பிரிவைச் சேர்ந்த செல்வி செல்வமலரின் அருமைச் சகோதரி செல்வி ஔவைப்பிள்ளையின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆங்கில மன்றம்: பலாலி ஆசிரிய கலாசாலை. (சி.4145

# பொங்கல் வியாபாரம்

யாழ்ப்பாணம் ஜன 14

தைப் பொங்கலை ஒட்டி நேற்று யாழ் நகரில் வியாபாரம் மும்முரமாக நடந்தது. பெரியகடைப் பகுதியில் இரவு 8.30 மணிவரை பொங்கல் வியாபாரம் நடைபெற்றது.

பொங்கலுக்குரிய பொருட்கள் பலவற்றின் விலைகள் நேற்றுக் குறைவாக இருந்தன. கடந்த இரண்டொரு நாட்களுக்கு விற்கப்பட்ட விலைகளை விட மூன்றில் ஒருபங்கு விலைகளுக்கு அரிசி, தேங்காய், பயறு ஆகியவற்றை நேற்று வாங்கக்கூடியதாக இருந்தது. (அ-15)

## வேங்கைகளைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். உங்களது செயல் மற்றவர்களுக்கு உந்து சக்தியாக அமைய வேண்டும்" என்று அவர் மேலும் கூறினார்.

இவ்வைபவத்தின் போது 17 போராளிகளுக்குத் தலைவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். அச்சம்பவங்களின், அப் போராளிகளினதும் விபரம் வருமாறு:

★ 29-08-1992 அன்று, யாழ் மாவட்டத்தில் உள்ள மண்டை தீவில் கடற்படையினரின் கடல் எல்லைக்குள் சென்று மின்னல் வேக தாக்குதல் ஒன்றினை நடத்தி, அவர்களது 45 அடி நீளமான "வோட்டர் ஜெற்" படகு ஒன்றினைக் கைப்பற்றியமை. இத்துணிகரமான நடவடிக்கையில் ஈடுபட்ட தம்பி, ஜீவா, ஆழியன், தென்னவன் ஆகியோருக்கு இறுமையாக செயற்பட்டமைக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

★ 25-09-1992 அன்று, மன்னார் மாவட்டத்தில் பூநகரியில் உள்ள பள்ளிக்குடா என்னும் இடத்தில் அமைந்திருந்த இரு இராணுவ மினி முகாம்களையும் 62 தொடர் காவலரண்களையும் புலிகள் தாக்கி அழித்தனர். இத்தாக்குதலின் போது ஒன்றரை மைல் நீளமான பகுதி புலிகளின் பக்கம் வீழ்ச்சியடைந்தது. இந்த வெற்றிகரமான தாக்குதலுக்காக இப்பகுதிகளைத் திறம்பட வேவுபார்த்த, தர்மேந்திரா, குலசங்கர், செ(ழ்)ற வன், வெற்றிமணி, அரிமாவரசு, கதிரவன், நம்பி, ஆதவன், ஜெயம், சிவம் ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

★ 30-09-1992 அன்று, வவுனியா கோட்டத்தின் எல்லைப்புறமான பதவியா — பராக்கிரமபுர பகுதியில் அமைந்துள்ள கோங்வேவ என்னும் இடத்தில் அமைந்திருந்த இராணுவ மினி முகாம் ஒன்றின் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில், மினி முகாம் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டது. இந்த முகாமை முழுமையாகத் தகர்த்தெறிவதற்காக இதன் பகுதிகளைத் திறம்பட வேவு பார்த்த சூரியன், பரன், சுந்தரம் ஆகியோருக்கும் தலைவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (உ)

# எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன 14

எழுதுவினைஞர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இத் தகவலை யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கொழும்பில் இருந்து அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 73 நிலையங்களில் நடைபெறவுள்ள இப்பரீட்சையில் சுமார் 7 ஆயிரம் பேர் வரை தோற்றவுள்ளனர்.

பரீட்சைக்கான வினாத்தாள்களையும் அனுமதி அட்டைகளையும் கொழும்பில் இருந்து இங்கு எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

# பொலீஸ் சூடு! சுவிஸ் பிரஜை காயமுற்றார்

பொத்துவில் பகுதியில் பொலீஸாரின் சூட்டுக்கு இலக்காகி சுவிஸ் பிரஜை ஒருவர் காயமடைந்தார்.

அங்குள்ள அதிரடிப்படை முகாம் ஒன்றுக்கு முன்னால் பொலிஸாரின் உத்தரவையும் மீறி தமது காரை நிறுத்தாது இவர் ஓட்டிச் சென்றபோது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ரோனியுலா ஓன்மர் ஜோசப் என்ற இந்த நபர் முதலில் பொத்துவில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் பதுளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

# ஈராக் மீது மீண்டும் தாக்குதல்

ஈராக் இலக்குகள் மீதான தாக்குதல்களை நேசநாட்டு விமானப்படைகள் ஆரம்பித்திருப்பதாக நேற்றிரவு அமெரிக்காவின் அரச மற்றும் இராணுவ வட்டாரங்கள் அறிவித்தன.

அமெரிக்க விமானங்கள் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாகவும் —

பிரிட்டன், பிரான்ஸ் நாட்டு விமானங்கள் அவற்றுக்குத் துணையாகச் செல்வதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ)

## படுகாயம்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அண்மையில் நேற்று மாலை இடம்பெற்ற வெடிவிபத்தில் வீதியால் சென்ற ஒருவர் தலையில் படுகாயமடைந்தார்.

ஆரியகுளம் பகுதியைச் சேர்ந்த சிவபாதம் செல்வம் [33 வயது] என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் நினைவிழந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-15]


நியூ மற்ஸ் அக்கடமி

வானவில் முன்பாக, யாழ். ஆரியகுளம் சந்தி.

A/L PHYSICS

சங்கர்

* புதிய 4 பிரிவுகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
* அனுமதிகளை உடன் பெறவும்.

(சி/4146


# ஜி. சி. ஈ. (உ.த.) பரீட்சை: கிளிநொச்சி முடிவுகள்

முறிகண்டி, ஜன. 14

கடந்த ஆண்டில் நடைபெற்ற ஜி.சி.ஈ. (உயர்தரப்) பரீட்சை முடிவுகள் கிளிநொச்சியில் வெளியாகியுள்ளன. அங்கு பெறுபேறுகள் இம்முறை சிறப்பாக அமையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. சில பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு:-

கிளிநொச்சி ம.ம.வி.

★ கணிதம்; ஏ பி ஸி எஸ் - ஒருவர், ஏ 3 எஸ் - ஒருவர்.

★ வர்த்தகம்: 2பி 2ஸி, 2பி ஸி எஸ் - தலா ஒருவர்.

★ கலை: 2பி ஸி எஸ் - ஒருவர்.

கிளிநொச்சி இந்து ம வி

★ கணிதம்: பி 3ஸி - ஒருவர், பி 2ஸி எஸ் - ஒருவர்.

★ விஞ்ஞானம்: 2பி 2ஸி - ஒருவர்.

★ வர்த்தகம்: 2பி ஸி எஸ் - ஒருவர்.

★ கலை: ஏ பி, பி3 ஸி - ஒருவர்.

சென் திரேசா மகளிர்

★ கணிதம், விஞ்ஞானம் சிறப்பாக இல்லை.

★ வர்த்தகம்; 2பி 2ஸி - ஒருவர்.

★ கலை: 2பி ஸி எஸ் - ஒருவர். (உ-97)

### களுத்துறை, பலாலியிலிருந்து

# யாழ். வாசிகள் 35 பேர் விரைவில் விடுதலை

யாழ்ப்பாணம், ஜன. 14

களுத்துறை மற்றும் பலாலி தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் — யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த — சுமார் 35 பேர் விரைவில் விடுதலை செய்யப்படவிருக்கின்றனர்.

கொழும்பிலிருந்து யாழ். அரச அதிபர் யாழ். செயலகத்துக்கு இத்தகவலை அனுப்பி வைத்திருக்கிறார்.

பலாலி முகாமிலிருந்து 20 பேரும் களுத்துறை தடுப்பு முகாமிலிருந்து 15 பேரும் விடுதலை செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது (உ-162)

# செயற்குழுக் கூட்டத்தில் அநுரா, சந்திரிகா போர்

கொழும்பு, ஜன 14

கடந்த வாரம் நடந்த சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பிள்ளைகளான அநுராவும் சந்திரிக்காவும் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இம்மாதம் 16, 17 ஆம் திகதிகளில் பாதயாத்திரை நடத்துவது பற்றி தீர்மானிக்க இக் கூட்டம் நடத்தப்பட்டது.

நித்தம்புவ கூட்டத்தில் இடம்பெற்ற கைகலப்புச் சம்பவம் பற்றி சந்திரிக்கா பிரஸ்தாபித்தார். அப்போது சந்திரிக்கா கதிரையில் இருந்து நவறி கீழே விழுந்து விட்டார்.

உடனே அநுரா, கதிரையில் உட்காரத் தெரியாதவர்கள் பற்றி கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்.

நிலத்தில் இருந்து எழும்பிய சந்திரிக்கா "கதிரைகளுக்காகச் சண்டை பிடிப்பவள் நானல்ல" — என்று கூறினார்.

# ஓவிய, கவிதை, சிறுகதை போட்டிகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன 13

மார்ச் 8ஆம் திகதி — அனைத்துலகப் பெண்கள் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினர் ஓவியப்போட்டி, கவிதை — சிறுகதை இலக்கியப் போட்டி ஆகியவற்றை நடத்தவுள்ளனர்.

ஓவியக் கலைஞர்களும் ஓவியக்கலையில் ஆர்வம் உள்ளவர்களும், எழுத்தார்வம் உடையோரும் வயது வேறுபாடுகள் இன்றி இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம் எனவும் —

ஓவிய, இலக்கியப் படைப்புகள் யாவும் பெண் விடுதலையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையிலும் தமிழ்ப் பெண்களின் யதார்த்த நிலையை வெளிக்கொணரக் கூடிய வகையிலும் அமைய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-க-7)

# நிதியாளர் விடுதலை

யாழ்ப்பாணம், ஜன. 14

கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி பெரளைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக் கழக உதவி நிதியாளர் திரு. எஸ். காந்தமூர்த்தி இன்று அல்லது நாளை விடுவிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது பற்றிய செய்தியை யாழ். அரச அதிபர் கொழும்பிலிருந்து அனுப்பியுள்ளார்.

திரு. காந்தமூர்த்தியும், யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரும் நாளை மறுதினம் கொழும்பிலிருந்து யாழ் நோக்கிப் புறப்படுவர் என்று மற்றொரு செய்தி யாழ். பல்கலைக்கழகத்துக்கு நேற்றுக் கிடைத்தது (உ-162)

## தேவாலயங்களிலும் தைப்பொங்கல்

குருநகர், ஜன. 14

யாழ்ப்பாணத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களிலும் தைப்பொங்கல் கொண்டாடப்பட உள்ளது.

யாழ். பேராலயம், புனித மரியாள் (அடைக்கல மாதா) கோவில் ஆகியவற்றில் பொங்கலைத் தொடர்ந்து வழிபாடுகளும் நடைபெறும்.

திருமறைக் கலா மன்றத்தில் காலையில் பொங்கலைத் தொடர்ந்து தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள வண. ஸ்ரீபன் அடிகளார் திருப்பலியை நடத்துவார். (அ51)


New English Academy

82, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்தி அருகாமை)

SPECIAL ENGLISH CLASSES

யாழ். நகரில் முன்னணி ஆங்கில ஆசிரியர் குழுவினரால் ஒருங்கிணைந்த சேவை நடாத்தப்படுகின்றது.

* B A., G. A. Q.
* YEAR 11, 10, 9 [English Lit.]

Dr. A. Sinnathamby, Retd. Education Officer English

* Spoken English With Grammar
* G C. E. [O. L] Dec.1993, Year 10, 9

R. Sivalingam, Dip-in-English

ஆரம்பம்: 16 - 01 - 93 (சனி பி. ப. 3.00 மணி)

[24066]



முக்கிய அறிவித்தல்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம்

கல்வி அபிவிருத்திக்கழக ஆசிரியர் மாதாந்தக் கூட்டம் 16-01-1993 காலை 10மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். தவறாது சமுகம் தரவும்.

தலைவர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், பண்டத்தரிப்பு.

(24063)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு வளர்ச்சி சமய வாழ்வை பிரதிபலிக்கும் பொங்கல் திருநாள்



தைப்பொங்கல் தமிழர் திருநாள். உழவர் பெருநாள் என்று சொல்வர். உலகுக்கு உணவிடும் உழவர் பெருமக்கள் சூரிய பெருமானுக்கு நன்றி கூறி எடுக்கும் விழாவே தைப்பொங்கல் ஆகும்

நமது பண்பாடு சமயத்தோடு பின்னிப்பிணைந்தது தைப்பொங்கல் சமய வாழ்வுக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் இன்றியமையாதது; அவற்றைப் பிரதிபலிப்பது.

மார்கழி மாதம் முழுவதும் வீட்டின் வாசலை மெழுகி கோலமிட்டு சாணிப்பிள்ளையார் பிடித்து வீட்டை அலங்கரித்துத் தூயவந்தனை செய்கின்றோம். பட்டிதொட்டி சிறக்க, கலைகள் செழித்தோங்க, செல்வம் பெருகிவர பொங்கும் இனிய தை மாதப் பிறப்பு என்றதும் சூரியன் மகரராசிக்கு மாறுகிறார்.

மழையையும், வெய்யிலையும் பகலையும், இரவையும் சூரிய பகவானே எமக்குத் தருகின்றார். ஆகவே இன்று நமது வீட்டு வாசலில் சூரியப் பொங்கல் சிறப்புற இடம் பெறுகின்றது இத்தைப் பொங்கல் முழு உலகத்துக்கும் தோற்றம் அளிக்கும் பகலவனுக்கானது. விவசாய முதிர்ச்சிக்கும் நாட்டு வளத்துக்குமாக சூரியன் எமக்குப் பிரத்தியட்ச தெய்வமாக நின்று உதவுகின்றார் இதனால் இப்பொங்கல் இல்லங்கள் தோறும் இடம்பெறுவதோடு, கோவில்களிலும் இடம்பெறும் சிறப்புத் தன்மையைக் கொண்டது

சூரியப் பொங்கல் பொங்கும்போது முழுக் குடும்பமுமே அதில் ஈடுபடுகின்றது. குடும்பத் தலைவனின் தலைமையில் தலைவியின் அனுசரணையுடன் இப்பொங்கல் இடம் பெறுகின்றது கோயிலிலே குருக்களின் தலைமையில் முழுக் கிராமமுமே தைப் பொங்கலைக் கொண்டாடுகிறது.

தமிழ்நாடு, இலங்கைத் தமிழ் மக்கள் தைமாதம் முதலாம் திகதியன்று தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றார்கள். அதே தினத்தில் கர்நாடக, கேரள ஆந்திர மக்கள் இதையே மகரசாந்திப் பண்டிகை என்று கொண்டாடுகின்றார்கள்.

தை மாத முதலாந்திகதி மகர சங்கிராந்தி உத்தராயன பிரதம புண்ணிய காலமாகும்.

இத்தினத்தில் எமது மக்கள் விசேஷ பூசை வழிபாடுகளும் தர்ப்பணங்களும் செய்வார்கள் முற்றத்திலே பசுஞ் சாணத்தால் மெழுகி கோலங்கள் இட்டு மூன்று கற்களை அடுப்பாக வைத்து புதுப் பானையில் பச்சரிசிப் பொங்கலிட்டு சூரியனுக்குப் படைப்பார்கள்.

பானைக்கு மஞ்சள்; மாவிலை என்பன கட்டுவர், முழுக் கரும்பை அருகில் கட்டியும், மாவிலை தோரணங்களால் அவ்விடத்தை அலங்கரித்தும் சூரிய பகவானைப் பிரார்த்தித்து இஞ்சி, மஞ்சள், கரும்பு, வெற்றிலை பாக்கு, பழவகை என்பனவற்றை நிவேதனம் செய்வர் கும்பம் வைத்து சூரியனை சாயா தேவி, உஷாதேவி சமேதராக ஆரோகணம் செய்து முறைப்படி பூசிப்பார்கள். புத்தாடை அணிந்து பட்டாசை சுடுவார்

திருமதி
காவேரி யோகநாதன்

(6ஆம் பக்கம் பார்க்க)




அனைவருக்கும் உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்து

உள்ளூர் உற்பத்திகளுக்கே உங்கள் ஊக்கம் தொடரட்டும்

உழவன் மூலமாகவே நமக்கு விமோசனம் ஏற்பட வேண்டும். எங்கள் கிராமங்களின் புனர் நிர்மாண வேலை விவசாயத்தில் தான் அடங்கியுள்ளது. எனவே உழவனை உயர்த்தப் பாடுபடுவது எவ்வளவோ மேல்!
– காந்தியடிகள்.

மில்க்வைற்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்

அன்றும், இன்றும்
படப்பிடிப்பில் கைதேர்ந்தவர்கள்
பாரத் ஸ்ரூடியோ
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
முதல்தர குளிர்களி
குளிர்பான
வகைகளுக்கு
லிங்கம் கூல்பார்
52, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

இன்று ஓராண்டைப் பூர்த்தி செய்யும்



தமிழ்மதி நகைமாடம்
வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன்
வழங்கும்
புத்தாண்டு - பொங்கல்
வாழ்த்துக்கள்

புன்னகைக்கே புடம்போடும் பொன்நகை!
நம்நகரில் நன்மதிப்புப் பெற்ற நகைமாடம்!

நயம், நாணயம், நம்பிக்கை, உத்தரவாதத்துடன்
நவீன டிசைன் நகைகளை
நாள்தோறும் அறிமுகப்படுத்துவோர்

தமிழ்மதி நகைமாடம்
82/6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(எம்மிடம் நகை கொள்வனவு செய்த வாடிக்கையாளர்கள் தமது ரசீதைக் காட்டி எதிர்வரும் 25ஆம் திகதிக்கு பின் அழகிய கலண்டரை இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பன்ரம் கோழிக்குஞ்சுகளும், அடை வைப்பதற்கு உகந்த பன்ரம், பாபடிக்ஸ், நாட்டு முட்டைகளும் உடன் விற்பனைக்கு உண்டு பிளான்ட் பரடைஸ், இல. 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (24034)

பாக்கு சீவும் கிரைன்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: க. தவகுலரத்தினம், வழக்கம்பரை, பாபு வீதி, தொல்புரம் கிழக்கு. (24059)

## மயூரதி வெளியீடு

கணிதம் ஆண்டு-8 வெளி வந்துவிட்டது. ஆண்டு-9, ஆண்டு-10, O/L கடந்த கால வினா-விடை விற்பனையாகின்றன. பூபாலசிங்கம், மக்மிலன், ஸ்ரீலங்கா, ஸ்ரீகாந்தா, ஸ்ரீகாந், மது, தனலக்குமி ஆகிய இடங்களில் கிடைக்கும். (5473)

## விதை தேவை

புளியம் விதை தேவை. தொடர்பு: 'மில்க்வைற்'. (சி-4144)

## MATHS

ஆண்டு 5இலிருந்து G.C.E. (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும், குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும், ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு குறைந்த காலத்தில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (23998)

## மிருதங்கம்

நீங்கள் விரும்பும் அளவுக்கேற்ப புதிய மிருதங்கம் குறித்த தவணையில் ஓடருக்கு செய்து தரப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (23921)

## தவறிவிட்டது

எமது ஸ்தாபனத்திற்குரிய முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிறிய பெட்டி ஒன்று 09-01-93 சனிக்கிழமை வெலிங்டன் தியேட்டருக்கும் நாவலர் றோட் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.239, மின்சார நிலைய வீதியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (5725)

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், விடுகளிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம் (5727)

# செஞ்சிலுவை பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம் ஜன. 14

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைமையகத்தில் இலவச பகுதிநேரப் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

தமிழ் தட்டச்சு - சுருக்கெழுத்து ஆங்கில தட்டச்சு-சுருக்கெழுத்து, பத்திரிகையாளர் பயிற்சி, சமூக நலனும் சமுதாய சேவையும், முதல் உதவி, ஆரம்ப சுகாதாரம், உதவித் தாதி, மருந்தாளர் பயிற்சி, தமிழ், ஆங்கிலம் ஆகிய பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன. (ஒ-க)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 30 — 11 — 1918

உதிர்வு: 16 — 12 — 1992

அமரர்

## தம்பிப்பிள்ளை தம்பிஐயா

(இரத்தினம்)

(களுத்துறை, அளுத்கம - ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பலாலி - ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றின் இளைப்பாறிய போதனாசிரியர்)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், காலம் எல்லாம் கலங்கரை விளக்கமாய் இருந்து, இப்பாரினில் எம்மை உயர்நிலைக்கு ஆளாக்கி திடீரென மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்துக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

17 - 12 - 1992 இல் நடைபெற்ற எமது குடும்பத் தலைவரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்களின் ஆத்ம சாந்திக்கு என்றும் பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

கோகுலம்,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (5723)

# ஓராண்டு நினைவலைகள்



அமரர்

## பொன்னையா இராமுப்பிள்ளை

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

அன்னையின் மடியில்: 21-07-1935

ஆண்டவன் அடியில்: 26-01-1992

திதி: 14-01-1993

பன்னிரு திங்கள் சென்றதையா
பன்னீராயிரம் நினைவலைகள் தோன்றுதையா
அன்பின் ஒளிவிளக்காய் அழகின் திருவுருவாய்
பண்பிலே சிகரமாய் பார்வையிலே சேவகனாய்
பொற்புடனே வலம் வந்தாய் ஆண்டு ஐம்பத்தேழு
சிறப்புடனே சென்றுவிட்டாய் எம்மையெல்லாம் -
சிரழிய வைத்துவிட்டு
என்ன எண்ணிச் செய்திருப்பாய்
என்ன சொல்ல அழைத்திருப்பாய் என்றெல்லாம் -
ஏங்குகின்றோம்!
எண்ணி எண்ணி வாடுகின்றோம்
ஏக்கம் தீர எம்வாழ்வில் இனியேது!

தங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டும்;

கைதடி கிழக்கு, [illegible]
கைதடி. (23994)

# பொது அறிவை வளர்க்கும் சஞ்சிகை

## அறிவுக் களஞ்சியம் - 7

இப்பொழுது விற்பனையாகிறது. (சி-4173)

# ஆறாவது மாத நினைவஞ்சலி



தோற்றம்: 21 — 03 — 1930

மறைவு: 21 — 07 — 1992

## அமரர் சுப்பையா தியாகராசா

(ஓய்வு பெற்ற தலைமை இலிகிதர்)

இற்றரையில் இனிதே எமைவளர்த்தீர்;
எங்களை, ஏது குறைவுமின்றி நீர்காத்தீர்!
அற்புதமாம் நின் நினைவு அப்பா;
எமைவிட்டு நீர் சென்று; மாதமோ ஆறு.
உற்ற உம் மனைவி, பிள்ளையர் யாம்,
உம் நினைவை தாங்கியிங்கே வாழுகின்றோம்!
முற்று மிக தொண்டு நீர் புரிந்தே...
மோட்சமே சென்றீர்! மாட்சிமை பெற்றீர்!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்;

அன்பு மனைவி, ஆசை மகன்,
அருமை மகள்மார், மருமகன்,
உறவினர்கள், நண்பர்கள்.

113, சந்தனமாதா கோவில் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (24049)

# ஓராண்டு நினைவஞ்சலி



## நடராசா சிவக்கொழுந்து

(புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரம்)

மண்ணில்: 10-03-1906

விண்ணில்: 26-01-1992

திதி: 14 - 01 - 1993

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, எம்மையும் வாழ்வித்த நின்னது ஆன்மா வானுறையும் தெய்வத்துள் சங்கமித்து ஆண்டொன்றாகியதோ! ஆறாத்துயரிலும் நின் ஆன்மா அவனடியில் சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

9A, பிள்ளையார் லேன்,
திருநெல்வேலி. (24045)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளங்கள் பெருகிட வைத்திடுவாயா?

குண்டு மழையிலும்,
குளிரிலும் நடுங்கி,
உதிரம் கொட்டி,
உழைத்ததனால்,
கதிரவன் -
கருணை செய்ய,
கதிர் விளைந்தது.
விளைச்சலைத் தந்த,
வெய்யவனுக்கு,
நன்றி செலுத்திட
பானையில் பால் விட்டு
பொங்கிப் -
படைக்கின்றோம்.
இன்னல்கள் -
நிறைந்தாலும்,
இதயங்கள் -
நிறைந்திட வைத்த
கதிரவனே!
இந்த மண்ணின்,
கண்ணீராறு வற்ற,
மாற்றான் -
தொலைந்திட,
மகிழ்ச்சி நிலைத்திட,
வளங்கள் பெருகிட,
வைத்திடுவாயா?

மீசாலையூர் - கமலா.

## உவகை பொங்கும்

தொழில்கள் சிறந்து
எழிலுற நாடு
தொடர்ந்திடும் போரும்
முடிந்திட அன்பு
உளங்கள் இணைந்து
பொங்கிட உதயன்
உலகைக் காத்த
உவகையில் பொங்கும்!

நெடுந்தீவு - லக்ஸ்மன்

## தைத் திருநாள்

இன்பம் பொங்கிடும்
திரு நாள்
எங்களின் வாழ்வினில்
பெரு நாள்
துன்பம் நீங்கியே
எங்களின் வாழ்வை
தூய்மை செய்யுந்தைத்
திரு நாள்
நன்மை களாயிரம்
தந்திடுந் திருநாள்
நாட்டினில் செல்வமும்
சேர்ந்திடுந் திருநாள்
இன்மையை நீக்கி
எங்களின் வாழ்வை
இனிதாய் மாற்றிடும்
பொங்கல் திருநாள்.

அரியாலையூர் - கேந்திரன்

## புதுயுகம் படைத்திடு


பொங்கல் திருநாளே
புதுயுகம் படைத்திடு
எங்கள் திரு நாடு
ஈழம் மலர்ந்திட
சங்கத்தமிழ் கலைகள்
தமிழர் சாற்றிட
திங்கட் திருநாளே
தீர்வு வகுத்திடு.

காரைநகர்
எம். பி. அருளானந்தன்.

## புலரும் நாளே புதுமைகள் தருவாய்!

பூத்திடும் பொங்கல்
புனிதத் திருநாள்
ஏங்கிடும தமிழர்
துயரினைப் போக்கும்
பாங்குடன் உழவுத்
தொழில்தனை புரியும்
பைந்தமிழ் இனத்தின்
பசிப்பிணி போக்கும்
உழவுத் தொழில்தனில்
உயர்ச்சியை தந்து
நிலவும் வறுமை
நிலையதை களைந்து
மலரும் நாட்களில்
மகிழ்வுடன் வாழ்ந்திட
புலரும் நாளே
புதுமைகள் தருவாய்.

அரியாலையூர்
வே. ஐ. குமரதாசன்



## எண்ணமெல்லாம் இனிப்பாள்

சங்கம் முழங்கிடச் சலங்கை குலுங்கிட
எங்களின் வாழ்க்கையில் இன்பங்கள் பொங்கிட
மங்கலத் தை வருவாள் - அவள்புதுச்
சங்கதிகள் தருவாள்.

இந்த மண் எங்களின் சொந்தமண் தானெனச்
சிந்துகள் பாடிச் சிலிர்த்திடும் வேளையில்
சுந்தரத் தை வருவாள் - அவளெங்கள்
சிந்தையை நிறைத்திடுவாள்.

அடிமை எனும் நிலை வெடித்துப் பறந்திட
மிடிமை அரக்கனும் ஓடிடச் சுதந்திரத்
தை மகள் இனி வருவாள் - தமிழீழத்
தாயகத் தைத் தருவாள்.

இன்னல்கள் தேய்ந்திட இன்பங்கள் ஓங்கிடக்
கன்னலுடன் செந்நெற் களனி செழித்திடப்
பொன் மகள் தை வருவாள் - அவளென்றும்
புதியக தை தருவாள்

மண்ணிலே விண்ணினைக் கண்டிடுவீரெனப்
பண் ணமுதம் பல பாடிக்கொண்டே இங்கு
வண்ண மகள் வருவாள் - தையவள்
எண்ண மெல்லாம் இனிப்பாள்.

- சிற்பி.

## தைப் பொங்கல் வைத்திடுவோம்!

பருப்புடனே பாகுமிட்டு
பாங்கான கோலமிட்டு;
பாரினிலே நம்மவர்கள்
பரம் பொருளைக் கண்டவிழா!
நாடுகாணு வேள்வியிலே
நம்மவர்கள் வெற்றியுற
நாமெல்லாம் பொங்கிடுவோம்
நலமடைய வாழ்த்திடுவோம்!!
தரணியிலே தமிழரெல்லாம்
தலை நிமிர்ந்து வாழ்ந்திடவே
தனிநாடு பெற்றிடுவோம்
தைப் பொங்கல் வைத்திடுவோம்!!!

- வண்ணை. சே. சிவராஜா.

## முற்றத்தின் முழுமைப் பொங்கல்

விடுதலை விளைவே யின்றி
விசனமே கொள்ளும் பொங்கல்
சுடுபடு காய முற்றே
துடித்திடும் துயரப் பொங்கல்
அடிமையே யானோ மென்றே
ஆற்றொணாச் சோகப் பொங்கல்
முடிவுறும் நாளே எங்கள்
முற்றத்தின் முழுமைப் பொங்கல்
நீர்நிலை நிறைந்து பொங்கின்
நிலவளம் நெடிது பொங்கும்
போர்முறை வெற்றி பொங்கின்
புலிப்படை புகழே பொங்கும்
நேர்நெறி நிதானம் பொங்கின்
நிம்மதி நிகழ்ச்சி பொங்கும்
சார்முறை தையிற் பொங்கல்
தமிழர்தம் திருநா ளாகும்.

- கவிஞர் வே. ஐயாத்துரை.

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது உளம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
★ ராக மாலிகா ★
ஆடை அகம்
பட்டுப் புடைவைகளுக்கு பெயர்பெற்ற ஸ்தாபனம்
4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(உட்புறம்)

★ வாடிக்கையாளர்கள்
★ அன்பர்கள்
★ ஆதரவாளர்களுக்கு
பொங்கல் வாழ்த்துக்கள்
நாடுங்கள் எங்களிடம்
கண்ணாடி வகைகள், Card - Board Sheets.
C. I. C. Paint வகைகள், நீர் இறைக்கும் இயந்திரம்,
Ceremis பொருட்கள், S. Lon Pipe வகைகளுக்கும்
NEW VEMAKI
27/3, POWER HOUSE ROAD, JAFFNA.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு
★ பொங்கல் வாழ்த்துக்கள் ★
FUDO ENTERPRISES
(Fudo Office Machines Co)
TYPEWRITERS
திருத்தவும்
தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புக்களுக்கும்
FUDO ENTERPRISES
(Fudo Office Mechines Co)
39/17, மின்சார நிலைய வீதி,
3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

விடிவை நோக்கும் அனைவருக்கும்
மங்களம் பொங்கும்
பொங்கல் வாழ்த்துக்கள்
புடைவை வணிகத்தில் நீண்டகால முன்னோடிகள்
திருமணம் மற்றும் சுபகாரியங்களுக்கான
உயர்ரகப் பட்டுப் புடைவைகளுக்கு
சீமாட்டி (ஜவுளிகள் சமுத்திரம்)
122, மின்சார நிலைய வீதி (மேல்மாடி),
யாழ்ப்பாணம்

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள்
ஆதரவாளர்கள் யாவருக்கும்
எமது உளம்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்
கலக்சி
புகைப்பட சேவை
337, 1ஆம் மாடி
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மாணவர்கள், விரிவுரையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
COMPUTER PROGRAMMING IN
BASIC LANGUAGE
புதிய பிரிவு ஆரம்பம்: 18—01—1993 10-30 மணி
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16 3rd CROSS STREET JAFFNA.

தமிழீழத்தின் தனிப்பெரும்
மருத்துவ தாதியர் கல்வி நிலையம்
சாயி
மெடிக்கல்ஸ் அக்கடமி
6, பருத்தித்துறை வீதி, (முதலாம் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.
அனைவருக்கும் எமது உளம் கனிந்த
★ பொங்கல் வாழ்த்துக்கள் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கே எஸ். ஆர் போட்டோஸ்

மங்களம் பொங்கும் தைப்பெருநாள்
நல்வாழ்த்துக்களை வாடிக்கையாளர்களுக்கு
தெரிவித்துக் கொள்கிறோம்!

★ வர்ண, கறுப்பு - வெள்ளை புகைப்படங்கள்
[பாஸ்போர்ட், அடையாள அட்டை, படம் பெரிதாக்கல்]
★ வீடியோ படப்பிடிப்பு (Mixing)
★ வெளிப்புறப் படப்பிடிப்பாளர்கள் (Mixing)
★ படச்சுருள் பிரதியாக்கம் (Colour Printing)

இவை அனைத்தையும் எமது நிறுவனத்தில் பதிவு செய்வதன் மூலம் விசேட கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள்:

**கே.எஸ்.ஆர். போட்டோஸ்**

766, காங்கேசன்துறை வீதி, நட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

[சி/4 43]



## பொங்கல் தின உதைபந்தாட்டம்

காலம்:- 14-01-1993 வியாழக்கிழமை
மாலை 3 மணி.
இடம்:- கோல்ட்ஸ்ரார் மைதானம், சிவா வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

பாடுமீன் A — ஸ்ரீமுருகன் A
றிங்கோஸ்ரார் A — சென்றோக் A

**இறுதி ஆட்டம்**
றோயல் — ஸ்ரீமுருகன் 17-01-1993

[24062]



## யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம்

*யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் முன்னர் அறிவிக்கப்பட்டது போல 16-01-1993 (சனிக்கிழமை) நடைபெறமாட்டாது.*

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செயலாளர்,
யா. கி. ஒ.

(5728)



## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



**★ செல்வன் வி. அரவிந்தன் ★**

தோலை, அல்வாய் விக்னராஜா - சிவமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் அரவிந்தன், அப்பா, அம்மா, அப்பம்மா ஆகியோருடன் முதலாவது பிறந்த நாளை, நாளை (15-01-1993) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமி, அன்ரிமார், சித்தப்பாமார், சித்திமார் பல்கலையும் பெற்று, வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

[5766]


## திறப்பு விழா

அராலி, ஜன 14

அராலி மேற்கு ராஜேன் கதிர்காமர் பொதுப்பணி விளையாட்டுக் கழகத்தினர் பொங்கல் தினமான இன்று கயிறு திரிக்கும் பயிற்சி நிலையம் ஒன்றை திறந்து வைக்கவுள்ளனர்.

அராலி மேற்கில் இன்று பிற்பகல் 3 மணிக்கு திறப்பு விழா வைபவம் இடம்பெறும்.

[ஒ-ரி-12]

## விநியோகம்

கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட முச்சக்கர வண்டிகள் யாழ். சமூக சேவைப் பகுதியில் வைத்து தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினாலும் மற்றும் பல்வேறு காரணங்களினாலும் ஊனமுற்ற பலர் இவற்றைப் பெறுவதற்கு யாழ். சமூக சேவைப் பகுதிக்கு விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களது விண்ணப்பங்களின் ஒழுங்குமுறையின்படி இவை விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[ஒ-100]

## அன்பளிப்பு

வட்டுக்கோட்டை — யாழ்ப்பாணக் கல்லூரி வை எம் சி ஏயினர் சித்தன்கேணி அகதி முகாமில் இருக்கும் சிறு பிள்ளைகளுக்கு உண்ணும் பாத்திரங்களை அன்பளிப்பாக வழங்கினார்கள். (க-ரி)

## ● இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணம், ஜன. 14

மரணச்சடங்கு ஒன்றில் உதவி புரிவதாகப் பாசாங்கு செய்த ஒருவர் பட்டப்பகலில் புத்தம் புதிய ஏசியா சைக்கிளைத் திருடிச் சென்ற சம்பவம் ஒன்று அண்மையில் யாழ்ப்பாணம் கலட்டி சீனியர் லேனில் நடந்தது.

சடங்கை நடத்திக் கொண்டிருந்த குருக்கள் மாலையை எடுத்துவருமாறு கூறிய தருணத்தைப் பயன்படுத்திய இந்தப் பாசாங்குப் பேர்வழி, அங்கிருந்த இளைஞர் ஒருவரின் சைக்கிளைத் தருமாறு கேட்டுப் பெற்றுக்கொண்டு அப்படியே தலைமறைவாகி விட்டாராம்.

(க-162)

---

**பண்பாட்டு...**

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள், வாண விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள்

**நம்பிக்கை மாதம்**

பால் பொங்குவதைப் பார்த்து வருடப் பலனை அறிவதும், பொங்கிய சர்க்கரைப் பொங்கலை சூரிய பகவானுக்கு அர்ப்பணிப்பதும், அதன்பின் விருந்தோம்பல் செய்வதும் நமது சம்பிரதாயங்களாகும்.

பொங்கல் பெருநாளில் சடுகுடு, தாச்சி மறித்தல், கிட்டி அடித்தல் போன்ற விளையாட்டுகளிலும் மக்கள் ஈடுபடுவதுண்டு. இவற்றுடன் பெண்களுக்கான பரதநாட்டியம், கும்மி ஆகியனவும், ஆண்களுக்கான கோலாட்டம், நாட்டியம் ஆகியனவும், இருபாலாருக்குமே பொதுவான நாடகம், நாட்டிய நாடகம், விவசாய நாடகம் ஆகியனவும்பொங்கல் தினத்தன்று இடம் பெறுகின்றன.

தைமாதம் தமிழர்களின் நம்பிக்கை மாதமாகும். ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்ற முதுரை இதனையே விளக்குகின்றது. சுபகாரியங்களும் புதிய முயற்சிகளும் திருமணங்களும் தை மாதத்தில் குறிப்பாக நடைபெறுகின்றன.

இவ்வாண்டின் தைமாதத்தையும் தமிழ் மக்கள் மிகவும் நம்பிக்கையுடன் வரவேற்கிறார்கள். தமது சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் விடிவு கிடைக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

★


## விமலா ஸ்ருடியோ & வீடியோ படப்பிடிப்பாளர்

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
எமது பொங்கல் நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்.

கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.



## ப. நோ. கூ. ச. சுன்னாகம்

அன்பர்கள், கூட்டுறவாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்.

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.



அனைவருக்கும் எமது இதயம் கனிந்த
★ பொங்கல் வாழ்த்துக்கள் ★

யாழ். நகரில் கம்பியூட்டர் கல்விக்கு
சிறந்த இடம்

## யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.



மாணவ, ஆசிரியர், ஆதரவாளர்களுக்கும்
எமது இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்

## தாதிப் பயிற்சி நெறி
## DIPLOMA IN NURSING

புதிய பயிற்சி நெறி ஆரம்பமாகிவிட்டது

உங்கள் பதிவுகளுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane, Jaffna.



## யோகர்சுவாமி தவநிலைய ஏழாவது ஆண்டு விழா

யோகர்சுவாமி தவநிலைய ஏழாவது ஆண்டு பூர்த்தி விழாவை முன்னிட்டு கும்பழாவளை பிள்ளையார் கோவிலில் தைப்பொங்கல் தினமாகிய இன்று விஷேட பூஜைகள், சொற்பொழிவுகள் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவகுரு - முத்துப்பிள்ளை,
யோகர்சுவாமி அடியவர்கள்.

அளவெட்டி. (5486)


## கிராம அபிவிருத்தி இலாகாவின், மாதர் அபிவிருத்தி நிலையங்களில் தையல், மனையியல் பயிற்சிக்கான விண்ணப்பம்

| | |
|---|---|
| கல்வித் தகைமை: | கல்விப் பொது சாதாரண பரீட்சை சாதாரணதரம். |
| வயது எல்லை; | 18 வயதிற்கு மேல். |
| விண்ணப்ப முடிவு திகதி: | 30—01—1993 |
| பயிற்சி ஆரம்பம்: | 10—02—1993 |

பயிற்சி நிலையங்கள் அமைந்திருக்கும் பிரிவுச் செயலர் பிரிவுகள் ; யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, கோப்பாய், உடுவில், வேலணை.

விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பக்காரர் வதியும் பிரிவுச் செயலருக்கு விலாசமிடப்பட்டு, தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் தையல், மனையியல் பயிற்சிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட வேண்டும்.

து. வைத்திலிங்கம்,
மாவட்ட பிரதி ஆணையாளர்,
அரச அதிபருக்காக,
யாழ். மாவட்டம்.

(சி-4142)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## தைபிறந்தது; வழி...

இன்று தைப்பொங்கல் திருநாள். தமிழர் பெருநாள். உலகம் வாழ உதவிடும் உதயனுக்கு, உழவர்கள் மட்டுமன்றி ஏனையோரும் உளம் பூரிக்க நன்றி கூறி அவனை வணங்கும் சிறப்புடைத் திருநாள்.

மக்கள் வாழ வழி செய்பவள் மண் மாதா. அவள் இயங்கத் துணைபுரியும் நாயகன் ஞாயிறு. பூமி செழித்தால் தான் வளம் கொழிக்கும். வளம் கொழித்தால் நாடும் மக்களும் சீர் பெறுவர்.

மக்கள் தமக்குச் சீரான வாழ்வு கிடைக்கக் காரணமாக இருந்த சூரியனுக்கு நன்றி தெரிவித்து அவனது ஆதரவையும், அருளையும் மேலும் வேண்டி நிற்கும் நாள் தைப் பொங்கல் நாள்.

வயற்பரப்பில் செந்நெல் விளைந்து மண் மாதாவின் மடி கனக்கும் போது உழவனின் மனம் பூரிக்கிறது. உவகை பொங்குகிறது. தனது உழைப்புக்குக் கிடைத்த பயனைக் கண்டு உவகை பொங்குகிறான். அந்த உள்ளத்து உவகை பொங்குதலை பிரதிபலித்து பானையில் பொங்கும் பாரம்பரியத்தை உண்டாக்கினான் தமிழன்.

தைப்பொங்கல் தமிழர்களின் சமயத்தோடு இணைந்த வாழ்வையும் அவர்களின் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் விளக்கும் பெருநாளாகவும் விளங்குகிறது.

தை மாதம் தமிழர்களின் நம்பிக்கை மாதமாகத் திகழ்கிறது. வயலில் இருந்து நெல் வீடு வந்து சேர்ந்து செல்வம் பெருக்கும் மாதம் அது. அந்தச் செல்வத்தினால் மேலும் பல மாதங்களுக்கு நல்ல காரியங்களைச் செய்யலாம் என்ற நம்பிக்கை பிறக்கிறது. அதனால் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை தமிழர் மனங்களில் வேரூன்றிய ஒன்றாகி விட்டது.

ஈழத் தமிழர்கள் கடந்த பல வருடங்களாக இன்னல்களே இயல்பு நிலையாக வாழ்பவர்கள். கடந்த இரண்டரை வருடங்களாக அவர்கள் மனிதனுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகள், வசதிகள் இல்லாமலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் தமக்கு வாழ்வு வரும் அதற்கான வழிபிறக்கும் என்ற நம்பிக்கையை இழக்கவில்லை.

ஆகையால் நம்பிக்கையின் எடுகோளாக விளங்கும் தை மாதத்தில், இன்றைய தைப் பொங்கலில் தமது எதிர்காலம் விடிவு நல்குவதாக இருக்காதா என்று எண்ணுவர்.

ஆனால்...

பொங்கல் பெருநாளைக் கொண்டாடுவதும் கஷ்டமான காரியமாகி உள்ளது. பொங்கலுக்குரிய பொருள்களின் விலைகள் மக்களின் கைக்கு எட்டாதவையாக உள்ளன. தேங்காய் யானை விலை; சர்க்கரை குதிரை விலை என்று எல்லாவற்றுக்குமே மக்கள் கொட்டிக் கொடுக்கவேண்டியுள்ளது. விறகுக்குத் திண்டாட்டம்; தீப்பெட்டி கூடக் கிடைப்பதில்லை. தேங்காய் எண்ணெய், கற்பூரம், சாம்பிராணி போன்ற பூசைப் பொருள்களுக்கு அலைந்து திரிந்தாலும் கிடைப்பதில்லை.

இவை எல்லாவற்றுக்கும் அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடையும், போக்குவரத்து தடையுமே பிரதான காரணங்கள். தமிழ் மக்களை அழுத்தி நெருக்குவதற்காக இராணுவ நடவடிக்கைக்கு மேலதிகமாக அரசினால் செய்யப்படும் கொடுமுறைகள்.

இந்தக் கொடுமைகளில் இருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என்பதே தமிழர்களின் வேணவாவாக உள்ளது. இந்தக் கொடுமைகளைத் தகர்த்தெறிய தை மாதம் வழி வகுத்தால் அது பெரும் நிவாரணமாக அமையும்.

# விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ் பிரீ ரவுண் ரோட்டறக்ட் கழகம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் அணியை எதிர்த்து சென். மேரிஸ் அணி மோதும். (உ)

★ ★ ★

ஹற்றன் நஷனல் வங்கி யாழ். மாவட்ட கழக அணிகளுக்கிடையில் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் ஜொனியன்ஸ் கறுப்பு அணியை எதிர்த்து ஷப்றா வி. க அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து பல்கலைக் கழக அலுவலர் அணியும் மோதவிருக்கின்றன.

நாளை மாலை நடைபெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் கறுப்பு அணியை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து பற்றிஷியன்ஸ் வி. க. அணியும் மோதும். (உ)

தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு ஆனைக்கோட்டை, அறுகால்மடம் அறிவொளி விளையாட்டு மைதானத்தில் இன்று மாலை நடைபெறும் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகளில் அறிவொளி, 'லெவன் ஸ்ரார்', அரியாலை ஐக்கிய கழகம் ஆகியவை பங்குபற்ற விருக்கின்றன. (உ)

★ ★ ★

யாழ். வட்ட லியோ கழகம் நடத்திவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில்— இன்று பிற்பகல் 2.30 மணி முதல் — வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:

★ வைக்கிங்ஸ் வி. க. அணி எதிர் அரியாலை ஐ. வி. க. அணி

★ யுத்காமல் வி. க. அணி எதிர் சென் நிக்கலஸ் வி. க அணி

★ சென். அன்ரனிஸ் வி. க. அணி எதிர் சென். மேரிஸ் வி. க. அணி. (உ)

★ ★ ★

யாழ் கரப்பந்தாட்ட சம்மேளனம் யாழ் மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தும் "செற்றப்" முறையிலான கரப்பந்தாட்டப் போட்டி நாளை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

நாளை சென் ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து நடேஸ்வராக் கல்லூரியும், யாழ் இந்துக் கல்லூரியை எதிர்த்து அத்தியார் இந்துக் கல்லூரியும், யூனியன் கல்லூரியை எதிர்த்து சென். ஜோசப் கல்லூரியும் மோதவிருக்கின்றன.

இச்சுற்றுப் போட்டியில் ஹாட்லிக் கல்லூரி, கனகரத்தினம் ம. ம. வி., நடேஸ்வராக் கல்லூரி ஆகியவை பங்கு பற்றுகின்றன.

ஆட்டங்கள் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் ம. ம. வி. ஆடுகளங்களிலும் நடைபெறவுள்ளன. (உ-17)

## நாளை

யாழ்ப்பாணம், ஜன. 14

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, வலிகாமம் பிரிவினரால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள 'வதிவிட வேளாண்மை' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (ஒ)

ㅇ ㅇ ㅇ

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகங்களின் கலை மன்றம் வழங்கும் ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் உற்சவ ஆரம்பவிழா நாளை இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் நடைபெறும். (உ)

## சனியன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஜன. 14

திருநெல்வேலி கிழக்கு லக்ஷ்மியம்பாள் சனசமூக நிலையத்தின் பொன்விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மரதன் ஓட்டமும், சைக்கிள் ஓட்டப் போட்டியும் சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளன. (உ-ள)

ㅇ ㅇ ㅇ

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கும் "சைவசித்தாந்தம், ஓர் அறிமுகம்" தொடர் பொது விரிவுரைகளின் மூன்றாவது முழுநாள் அமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

'சைவசித்தாந்த திருத்திக்கு ஈழத்தவரின் பங்களிப்பு' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. வேதநாதனும், 'சைவசித்தாந்த வாழ்வியல்' என்ற தலைப்பில் கலாநிதி நா. ஞானகுமாரனும் இந்த அமர்வில் உரையாற்றுவார்கள். (க

ㅇ ㅇ ㅇ

யாழ்ப்பாணம், ஜன. 14

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் உற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 முதல் மாலை 5 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (க-19)

ㅇ ㅇ ㅇ

உடுவில், ஜன. 14

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (ஒ 152)

## பொங்கல் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜன 14

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையமும், மாதர் சங்கமும் இணைந்து நடத்தும் பொங்கல் விழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். (உ-17)

ㅇ ㅇ ㅇ

அளவெட்டி, ஜன. 14

அளவெட்டி தெற்கு முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தின் பொங்கல் விழா இன்று காலை நிலைய முன்றலில் நடைபெறும். மாலையில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றும் இடம் பெறும். (உ-13)

ㅇ ㅇ ㅇ

கொழும்புத்துறை, ஜன. 14

கொழும்புத்துறை கிழக்கு மணிப்புரி கலைமகள் சனசமூக நிலையத்தில் இன்று காலை 10.00 மணிக்கு பொங்கல் விழா இடம்பெறும். (உ-30)

ㅇ ㅇ ㅇ

தென்மராட்சி, ஜன. 14

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலயத்தில பட்டிப் பொங்கலையிட்டு 'பக்தி மேம்பாட்டிற்கு ஆலய வழிபாடா, குரு வழிபாடா சிறந்தது' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் ஒன்று நாளை மாலை நடைபெறவிருக்கின்றது. (உ-117)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

1991 ஆம் ஆண்டு கடுங்காற்றினால் ஏற்பட்ட வாழைத்தோட்ட அழிவுகளுக்காக கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு விவசாயிகளுக்கு நாளை மறுதினம் வழங்கப்படவிருந்த நஷ்டஈட்டுக் கொடுப்பனவு பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-162)

## மணலாறில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| ஏ. கே. எல். எம். ஜி. | — 01 |
| அதற்குரிய 'ரம்' மகஸின் | — 01 |
| ஏ. கே. எல். எம். ஜி. ரோஸ்சர் | — 316 |
| ரி - 56 - 2 ரகத் துப்பாக்கி | — 01 |
| அதற்குரிய மகஸின்கள் | — 04 |
| ருடுத்தர ரவைகள் | — 1791 |
| ஏ. கே மகஸின் கவசம் | — 01 |
| 40 மி. மீ. ஷெல் | — 32 |
| ஜே. ஆர். கிரனேட்டுக்கள் | 04 |
| எம். 75 ரக குண்டுகள் | — 02 |
| கிட்பாக் | — 04 |
| மழைக் கவசம் | — 02 |
| தண்ணீர் தாங்கி | — 02 |
| தண்ணீர் தாங்கி கவசம் | — 01 |
| இராணுவ பெல்ற் | — 01 |
| தொப்பி | — 01 |

(உ-5)

## யுத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாத அளவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்திய பாணியிலான சமஷ்டி முறையை நான் ஆதரிக்க மாட்டேன். இந்திய முறையில், மாநில அரசுகளை மத்திய அரசு பதவி விலக்க முடியும்.

### பாரம்பரிய பிரதேசம்

வடக்கு - கிழக்கு பாரம்பரிய தமிழ்ப் பிரதேசமாக குறைந்தது நூறு ஆண்டுகளாக இருந்து வருவது உண்மை. 1958, 77' 83 வகுப்புக் கலவரங்களின் போது தமிழர்கள் எங்கே சென்றார்கள்? வடக்குக்கும் கிழக்குக்கும் தான் சென்றார்கள்.

1972, 1978 ஆம் ஆண்டுகளில் வந்த குடியரசு அரசமைப்புகளும் இரண்டு மாகாணங்களின் மொழி ரீதியான இணைப்பை அங்கீகரித்துள்ளன.

நிபந்தனையுடனான இணைப்பை 13 ஆவது அரசமைப்பு திருத்தமும் அங்கீகரித்துள்ளது. ஆகவே இணைப்பு இருக்க வேண்டும். இரண்டு மாகாணங்களிலும் அரச குடியேற்றத் திட்டங்கள் அனுமதிக்கப்படக் கூடாது.

பேச்சுகளுக்கு முன்னால் யுத்த நிறுத்தம் வேண்டும் எல்லாக் கோரிக்கைகளும் பேச்சுவார்த்தைக்கு உரியவை அரசு முதலில் யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் அது அவசியமாகும் தொண்டமான் கூறியது போல — விடுதலைப் புலிகளுடன் பேசாமல் தீர்வு காணமுடியாது யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது எப்படிப் பேச முடியும்?

### அரசு காலை இழந்தது

கொழும்பில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த பேச்சுகள் தோல்வி அடைந்ததற்கு இரு தரப்புமே காரணமாகும். இரு தரப்புகளும் தவறு விட்டன. அரசாங்கம் தனது காலை இழந்துக் கொண்டது.

ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்வதாக உறுதியளித்த அரசு, பின்னர் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை என்று சொன்னது — இவ்வாறு அவர் கூறினார்.

### காகித ரோஜா

"சமஷ்டி என்பதை வேறு பெயரில் அழைக்க முடியும் ரோஜா என்றால் ரோஜா தான் வேறு பெயரால் அழைத்தாலும்" — என்று அமைச்சர் ஹமீது கூறியது குறித்துக் கருத்து வெளியிடுகையில் —

"ஸ்ரீநிவாசன் யோசனை வெறும் காகித ரோஜா ஆகும். அது சிதைக்கப்பட்டு வெட்டப்பட்டு விட்டது" — என்று அவர் குறிப்பிட்டுக் கூறினார். (அ-எ)

## இணைப்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களிடமும் தென்பகுதி மக்களிடமும் தெரிவிப்பேன்.

★ பொருள்களை தடங்கல் இன்றி கொண்டுசெல்வது; பொதுமக்களின் போக்குவரத்தை இலகுவாக்குவது;

★ நாற்பத்தெட்டு பொருள்கள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குவது

★ யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது.

—இந்த விஷயங்கள் குறித்து தென்பகுதி மக்களும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பதற்கு நான் தூண்டுதல் செய்வேன்.

யாழ் குடா நிலைமையை சீராக்க இந்த மூன்று அம்சங்களில் ஒன்றை ஏற்று இரண்டை விடுவது நன்மை பயக்காது மூன்றும் ஒன்றாகச் செயற்படுத்தப்பட வேண்டும்.

### நிராகரிக்கக் கூடாது

நாடாளுமன்றத் தெரிவுக் குழு வெளியிடும் யோசனைத் திட்டத்தை பரிசீலனையின்றி, எடுத்த மாத்திரத்தில் எந்தத் தரப்பினரும் நிராகரித்து விடக்கூடாது. பேச்சுவார்த்தைக்கான ஓர் ஆரம்பமே தெரிவுக்குழுவின் யோசனைகள். இந்த யோசனை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கான கடைசி வார்த்தையாகாது.

தெரிவுக்குழுவின் யோசனையை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கூறவில்லை. அந்த யோசனைக்கு நுண்ணாய்வு சார்ந்த பதிலைக் (Critical Response) கொடுக்க வேண்டும்.

இணைப்பு, இணைப்புரத்து பற்றி எல்லாம் இப்போது பேசக் கூடாது. இணைப்புக்கும் இணைப்பின்மைக்கும் இடையேயான பிரச்சினைக்கு தீர்வுகாண பல மாற்று வழிகள் உள்ளன. எதிர் எதிராகப் போவதை நாம் மறுக்க வேண்டும். (We must refuse to be polarised) — என்றார். (உ-எ)

## வடக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்திற்கு பூரண விளக்கமொன்றை சமர்ப்பித்துள்ளார் என்றும் சொல்லப்படுகிறது.

எனினும் அமைச்சர் ஹமீத்தின் பேச்சுவார்த்தை பயன் அளிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ் அரசியல் கட்சிகள் நம்பிக்கை இழந்துள்ளதால், அரசாங்கம் இராணுவ நடவடிக்கைக்கு தள்ளப்பட்டுள்ளது என பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரி ஒருவர் கொழும்பில் தகவல் தெரிவித்துள்ளார். (ஒ)

## நல்லை ஆதீன முதல்வரின் நல்வாழ்த்து

நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட நல்வாழ்த்துச் செய்தி:

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர் நம்பிக்கை. நாம் மன அமைதியுடன் சுபீட்சமாக இன்பமாக வாழும் காலம் வரும், அதற்கு எல்லாம் வல்ல இறைவன் நன்னெறி காட்டுவார். இறைவனை நம்புங்கள்.

எல்லோருக்கும் எமது உளமார்ந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைச் சமர்ப்பித்து ஆசீர்வதிக்கின்றோம்.

## வங்கியாளர் நிறுவனம்

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணத்தில் வங்கியாளர் நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது இலங்கை வங்கியும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய வர்த்தக வங்கிகளும் இணைந்து இந்த நிலையத்தை உருவாக்கி உள்ளன.

வங்கிகள் குறித்தும் அவற்றின் செயற்பாடுகள் குறித்தும் மக்களுக்கு அறிவூட்டும் முகமாகவே இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பிரபாவின்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய பாராட்டுதலைப் பெறும்."

அங்கிலிக்கன் ஆயர் அதிவண. சென்னத் பெர்னாண்டோ செய்தியாளரிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"இரண்டு பொலிஸாரை விடுதலை செய்ததற்காக விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுக்கு நான் நன்றியுடையவனாக இருப்பேன்.

"விடுதலைப் புலிகள் தலைவர்கள் என்னை வரவேற்று உபசரித்தனர். அதற்கு நான் நன்றி கூறுகின்றேன்.

"தென்னிலங்கை மக்களின் சிந்தனையில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. சண்டையை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற புதிய போக்கு அங்கு ஏற்பட்டு வருகின்றது.

"ஒரு வார காலம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தேன். எனது மிஷனின் பாடசாலைகள், தேவாலயங்களைப் பார்ப்பதே எனது விஜயத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

"இச்சந்தர்ப்பத்தில் மக்களின் துன்பங்களையும், பேரழிவுகளையும் நான் காண முடிந்தது" — என்றார். (உ-எ)

## நலம் தரப் பாலே பொங்கு!

இன்பமே எங்கும் பொங்க
இதயத்தில் அன்பு பொங்க
நன்மையாய் விளைவும் பொங்க
நலம் தரும் அமைதி பொங்க
நன்றியாம் நினைவே பொங்க
பரிதிக்குப் படைக்கும் பொங்கல்
இன்னமுது ஆகப் பொங்கப்
பாலே நீ பொங்கு பொங்கு!

- நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.

## உழவர் வாழ்க!

உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க வாழ்கவே
மண்ணை உழுது பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே.

ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு பண்ணித் தருபவர்
நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர்.

பாடுபட்டு உழுபவர்
பலனுங் கண்டு தருபவர்
நாடு வளர வாழ்பவர்
நன்கு வாழ்க வாழ்கவே

—மி. செ.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வாரம் இரு தினங்கள்

## போர்முனைக்குச் செல்ல தளபதிகளுக்கு உத்தரவு!

கொழும்பு, ஜன. 14
வாரத்தில் இரண்டு தினங்கள் போர்முனையில் உள்ள படையினரைச் சந்திக்க வேண்டும்.

—இவ்வாறு படைத்தளபதிகளுக்கு பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு டி. பி. விஜேதுங்கா உத்தரவிட்டுள்ளார்.

தங்களது நாளாந்த கடமைகளுக்குப் புறம்பாக தளபதிகள் போர்முனை விஜயங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி துரைராசா
(தலையாழி)

திருமதி மகேஸ்வரி துரைராசா 13-01-1993 புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும், லோகேஸ்வரன் (U.K) சிறிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், இராஜகுதா (UK), இரத்திவவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், இலக்சுமனின் (U.K) அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, சோதிப்பிள்ளை, வேலாயுதபிள்ளை மற்றும் பூரணம், செல்லத்துரை, நடராசா, பூமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (14-01-1993) வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் கொக்குவில் பொது மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
அ. ஆனந்தஜோதி

224, சபாபதி வீதி,
தலையாழி, கொக்குவில். (24065)

### சின்னத்தம்பி பொன்னம்பலம்

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் (சாவகச்சேரி நீதிமன்ற ஊழியர்) 02-01-1993 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கண்மணி தம்பதியினரின் அருமை மகனும், கற்பகமலரின் அன்புக் கணவரும், அனுசா, சோபியா, யுனிஷா, அருணாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம், விசயரத்தினம், தவரத்தினம், சுந்தரநாதன், திருமதி சச்சிதானந்தம், திருமதி பரமானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, சகோதரர்கள்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய் (24060)

### மனவல் மரியாம்பிள்ளை

மனவல் மரியாம்பிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரேசம்மாவின் அன்புக் கணவரும், பிலோமினா, றோஸ், கார்மெல், கிறிஸ்ரீனம்மா, அருட் திரு. யேசுரெட்ணம் அடிகளார் (உ.ப தந்தை மானிப்பாய்), ராஜகுரி பெனற் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், நோச்மோட்டியர், சேவியர் (வர்ணப்பூச்சு ஒப்பந்தக்காரர்) ஜெயசீலன், சின்ராசா, றொறன்ஷியா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (14-01-1993) பி. ப 4.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து பரி சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட் திரு. யேசுரெட்னம் அடிகளார்
(மகன்)
உதவி பங்குத் தந்தை மானிப்பாய்

18, 1 ஆம் குறுக்கு வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். (24071)

### வஸ்தியாம்பிள்ளை சுவாம்பிள்ளை

பெரியவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது சங்கானையை வசிப்பிடமாகக் கொண்டவரும் அகிய வஸ்தியாம்பிள்ளை சுவாம்பிள்ளை காலமானார்.

இவர் அன்ரன் சந்திரா (கிளை முகாமையாளர், பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச), மதுரநாயகி, மேரி பற்றீசியா, மகிமை (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பபா, தனேஸ்வரன் (இலங்கை வங்கி, மானிப்பாய்), காலஞ்சென்ற பத்திநாதர், ராஜ்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷா, நிஷா, துகா, ஜெயகரன், றொபின், பிறின், வின்சன், யோன்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (14-01-93) வியாழக்கிழமை பி. ப 3.00 மணிக்கு பெரியவிளான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க. அன்ரன் (மகன்)

சங்கானை.
(24061)

## பெண் பொலீஸ் கொமாண்டோக்கள்!

### ஏப்பிரல் முதல் சேவையில்

கொழும்பு, ஜன. 14
பெண் பொலீஸ் கொமாண்டோக்கள் எதிர்வரும் ஏப்ரல் தொடக்கம் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முதலில் கொழும்பிலும் அம்பாறையிலும் பெண் பொலீஸ் கொமாண்டோக்கள் பணி புரிவார்கள்.

முதல் தொகுதியாகத் தெரிவு செய்யப்பட்ட 34 பெண் கொமாண்டோக்கள் கட்டுக்குருந்த பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் உயர்தர தீவிரவாத எதிர்ப்புப் பயிற்சி பெற்று வருகின்றனர். 28 ஆயிரம் விண்ணப்பதாரர்கள் மத்தியில் இருந்து இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தங்கள் இராணுவ நடவடிக்கைகளில் பெண் போராளிகளைப் பயன்படுத்தத் தொடங்கி 9 ஆண்டுகள் கழித்தே ஸ்ரீலங்கா அரசு பெண்களைப் படைகளுக்கு சேர்த்தது என்றும் —

விடுதலைப் புலிகளின் பெண் கொமாண்டோக்கள் பலர் உயர் பயிற்சி பெற்றவர்கள் என்றும் —

இந்திய அமைதிப்படை மற்றும் இலங்கை அரசு படைகளுக்கு எதிரான கடந்தகால யுத்தங்களில் பெண் புலிகள் முக்கிய பங்கை வகித்திருப்பதாகவும் — "சண்டே ஐலண்டில்" ஷமிந்திரா பெர்டினன்டோ எழுதிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நான் யாழ். செல்வதால் என்ன பயன் கிடைக்கும்?

### இப்படிக் கேட்கிறார் தொண்டா

கொழும்பு, ஜன. 14
"இனப்பிரச்சினை தொடர்பான எனது யோசனைகளை பெரும்பான்மைக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையில் நான் யாழ்ப்பாணம் செல்வதில் என்ன பிரயோசனம்"

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் அமைச்சர் திரு எஸ். தொண்டமான்.

திரு. தொண்டமான் யாழ். சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டத்தை கைவிட்டுள்ளார். இதுபற்றி அவரிடம் செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு —

"நான் தெரிவுக்குழு முன் வைத்த யோசனையை பெரும்பான்மைக் கட்சிகள் ஏற்றுக் கொண்டால், என்னுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என விடுதலைப்புலிகள் எனக்கு அறிவித்தனர்.

"ஆனால் எனது யோசனையை பெரும்பான்மைக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படியானால் நான் யாழ்ப்பாணம் செல்வதில் என்ன பிரயோசனம்?" — என்றார்.

"தெரிவுக்குழுவில் இருந்து நான் எனது தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டாலும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு எனது பங்களிப்பு தொடரும்" என்றும் தொண்டமான் கூறினார். (ஓ)

## 'கொப்பேகடுவ' கலண்டர்! பரபரப்புடன் விற்பனை

கொழும்பு. ஜன 14
மறைந்த லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவவின் படத்துடன் கூடிய புது வருடக் கலண்டர்கள் கொழும்பில் பரபரப்புடன் விற்பனையாகி — விற்பனையில் சாதனை ஏற்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கலண்டர் விற்பதால் கிடைக்கும் பணம் போரில் காயமடையும் சிப்பாய்களுக்கு உதவுவதற்காக பயன்படுத்தப்படுகிறது என்று கூறியே நடைபாதை வியாபாரிகள் விற்பனையில் ஈடுபட்டுள்ளார்கள்.

இப்படிக் கூறியதும், "அப்படியானால் இரண்டு கலண்டர்கள் தாருங்கள்" — என்று தெரிவித்து கேட்ட பணத்தைக் கொடுத்து விட்டுச் சிங்கள மக்கள் செல்கிறார்களாம்.

ஒரு கலண்டரின் விலை 15 ரூபா. (உ-எ)

### அங்கிலிக்கன்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவமன்றச் செயலாளர் அருட்கலாநிதி ரியான்சி பெரேராவும், மற்றும் ஆயரின் வேண்டுகோளை ஏற்று விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட இரு சிங்களப் பொலிஸாரும் ஆயருடன் கூடச் சென்றனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் இவர்கள் நேற்று மாலை பருத்தித்துறையில் இருந்து 'குமண' கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

யாழ் அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த பிதா நேசக்குமாரும், டாக்டர் ஜெயகுலராஜாவும் பருத்தித்துறையில் வைத்து ஆயரை வழியனுப்பி வைத்தனர்.

பலாலியில் இருந்து நேற்று இரவு ஆயரும் ஏனையோரும் விமானமூலம் கொழும்பு செல்ல ஏற்பாடாகியிருந்தது.

அங்கிலிக்கன் ஆயர் அதி. வண கென்னத் பெர்னாண்டோ இராணுவத்தினரின் எச்சரிக்கையை மீறி கடந்த வியாழன் இரவு கிளாலியூடாக படகில் யாழ் வந்து இங்கு ஆறு நாட்கள் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

### தீக் கிரை

கொழும்பு ஜன 14
ஹொரணையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீவிபத்தில் பழைய சந்தைக் கட்டிடத் தொகுதியில் இருந்த 22 கடைகள் எரிந்து சாம்பலாகின. [உ-6]

### 4 புதிய...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

வரும் நான்கு பட்டாலியன்கள் அரசின் இந்தக் கொள்கைக்கு உட்பட்டே இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

### வங்கியாளர்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தின் அலுவலகம் நாவலர் மண்டபத்தின் ஒரு பகுதியில் இயங்கும் இதற்கான வசதியை யாழ் மாநகரசபை செய்து கொடுத்துள்ளது.

வங்கியாளர் நிலைய அலுவலகம் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கத்தினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

வங்கியாளர் நிறுவனத்துடன் வங்கியாளர் சங்கமும் உண்டாக்கப்பட்டுள்ளது. [அ]

மாகாணசபைத் தேர்தல்கள்;

## பொதுவேட்பாளர் பட்டியல் சுதந்திரக்கட்சி ஆராய்கிறது!

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து பொது வேட்பாளர் பட்டியலில் போட்டியிடுவதுபற்றி சுதந்திரக் கட்சி ஆராய்ந்து வருகின்றது.

அக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா இதனைத் தெரிவித்தார். கடந்த மாகாணசபைத் தேர்தலை சுதந்திரக் கட்சி பகிஷ்கரித்தது என்பது தெரிந்ததே. (த-எ)

### எம் உயிரினும் இனிய அப்பாவின் ஈராண்டு நினைவாக

தோற்றம்: 05 — 04 — 1938



மறைவு: 13 — 01 — 1991

**அமரர் முருகுப்பிள்ளை தருமதாசன்**
(கிராமசேவை அலுவலர் - தரம் I)

தாரணிபோற்றுகின்ற பொங்கல் நாளில்
தலைவா உம் பிரிவால் தவிக்கின்றோம் நாம்!
ஈராண்டு நாளொன்று கழிந்திட்டாலும்
இதயத்தின் சுமை சற்றும் தணியாதப்பா!
ஆறாத காதலொடு உங்கள் ஆத்மா
அமைதிபெற அஞ்சலிகள் செய்தோம் ஐயா!

கலைநகர்,
சித்தன்கேணி.

மனைவி, மக்கள்.
(24064)

### 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி மங்கையர்க்கரசி சபாபதி**

மலர்வு: 21—08—1934
உதிர்வு: 25—01—1992

திதி:- 14—01—1993

காலமெலாம் எமை வளர்த்து
ஞாலமெலாம் எமை உயர்ச்சியுற
வாழவைத்த தாயே!
ஆண்டொன்று சென்றாலும்
அகலாது நின் நினைவு;

துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

224, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (24070)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org